DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.589/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயா | க-பெ | சங்கர் |
| ஊர்: | : | மானகிரி | | |
| வயது: | : | 50/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உணவகம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026

**7 மற்றும் 10 ம் எதிரிகள் ஆஜர். பிற எதிரிகள் ஆஜர் இல்லை.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் மானகிரியில் வசித்து உணவகத் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு தொடர்பாக ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 1. புகாரில் உள்ள கையொப்பம் அசாஆ 2.** சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரிகள் மீது இருந்த முன் விரோதம் காரணமாக தவறுதலாக புகார் அளித்துவிட்டேன். மற்றபடி எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நான் புகாரில் சொல்லியுள்ள போல் எதிரிகள் சட்ட விரோதமாக ஒன்று கூடவில்லை. என்னை கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டவில்லை. அடித்து கொலைமிரட்டல் எதுவும் எடுக்கவில்லை. சம்பவ சமயத்தில் உணவகத்தில் இருந்த போது சில நபர்கள் அத்துமீறி உள்ளே நுழைந்து என்னுடைய கடையை அடித்து நொறுக்கினார்கள். விடியற்காலையில் நடந்ததால் யார் அந்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கடைக்கு வெளியே எதிரிகள் அங்கிருந்ததால் அவர்கள் தான் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்று நினைத்து புகார் அளித்துவிட்டேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 28.04.2016 அன்று விடியற்காலை 4.30 மணியளவில் தன்னுடைய உணவகத்தில் இருந்த என்னை அடையாளம் தெரிந்த ஆஜர் எதிரிகள் உட்பட சில நபர்கள் அங்கு வந்து அத்துமீறி உள்ளே நுழைந்து கடையின் பூட்டை உடைத்து உள்ளே இருந்த சாமான்களை எடுத்து வெளியே போட்டதாகவும் தன்னையும் தனது கணவரையும் ஆஜர் எதிரிகள் உட்பட அனைத்து நபர்களும் சேர்ந்து கொண்டு கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி அடித்து காயப்படுத்தி கீழே தள்ளி விட்டார்கள் என்றும் எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் பின்னர் நடந்த விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:27:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.